முருகப்பெருமான் துணை

**மகான் அருணகிரிநாதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண  ஜோதியே நமோ நம

**03.05.2023,** புதன்கிழமை

**1.** தரிசிப்பார் வினை போக்குகின்ற
தயவான ஞான குருவரங்கன்
நெறிமுறை ஏற்ற மக்களுக்கு
நிலவுலகில் பாதுகாப்பு உண்டெனக்கூறி

**2.** கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது தகர்திங்கள்
வரமென இருபான் திகதி புந்திவாரம்
**(**சோபகிருது வருடம் சித்திரை மாதம் **20**ம் நாள், **03.05.2023,** புதன்கிழமை**)**
வழங்குவேன் அருணகிரிநாதர் யானும்

**3.** யானும் உலகோர் தெளிவுபெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் ஞானிஅரங்கன்
ஞானமாம் சன்மார்க்க வழிகளை
நம்பி மக்கள் ஏற்றால்தான்

**4.** ஏற்றால்தான் மாற்றம் என்பதை
இந்தயுகத்தில் ஞானிகளை கொண்டு
ஆற்றல்பட ஆறுமுகனார் நடத்துவார்
அவ்வாறு சரணாகதி அணுகாத வரை

**5.** வரைதனில் ஏதப்பா மாற்றம்
வருங்காலம் இப்படியே தொடர்ந்தால்
பேரிடராக பலவழி வையகம் கண்டு
பின்னடைவு அழிவும் காணுமப்பா

**6.** அப்பனே கடைத்தேற்றிக் கொள்ள
அழிவிலா அகிலம் படைக்க
காப்பான ஞானவான் தலைமை
கண்டு உலகம் மேன்மைபெற

**7.** மேன்மை பெற நல்ல மார்க்கமாக
மேலான ஞானியர்களை வணங்கி
உண்மைபட நித்ய பூசையோடு
உயர்வான அன்னதானம் செய்து கொண்டு

8. கொண்டுமே சன்மார்க்கம் தழுவி
குருவரங்கள் தருகின்ற ஆசிபட
தொண்டதனை செய்து வருக
தெரிவிப்பேன் ஆறுமுகப் பெருமான்

9. பெருமானார் காட்சியும் ஆசியும்
பிசகின்றி மக்கள் அடைந்து
வருங்காலம் வேலவன் வழிநடத்த
வளர்ச்சியும் மகிழ்ச்சியும் நிறைந்த

10. நிறைந்த ஞான பூமியாகவே
நிலவுலகம் மாற்றம் கண்டு
குறைவிலா இயற்கை பலமுடன்
கூறிடுவேன் எந்தவித பங்கமும்

11. பங்கமும் அபகரிப்பும் ஊழலும்
பதுக்கலும் சுருட்டலும் இல்லா
அங்கம் வகிப்பவர் ஆளுமையாக
அகிலம் கண்டு சிறந்திடும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—